**Kalanjiyam - International Journal of Tamil Studies**
Volume: 5 | Special Issue 1 | December 2024 | eISSN: **2456-5148**

களஞ்சியம் - KALANJIYAM
INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

‘

# PONMUDI'YAR?

**Dr. J. Kaveri**

**Assistant Professor, Tamil Department, V.V. Vanniyapperumal Women's College, Virudunagar.**
**kaveri@vvvcollege.org mobile Number : 9994273317**

**Abstract:**

Sangam literature occupies a prominent position in Tamil cultural heritage, serving as a significant repository of Tamil identity. Within this literary corpus, female poets, alongside their male contemporaries, contributed to the creative and intellectual landscape. Despite issues of preservation affecting the works of male poets, a notable body of poetry authored by women has been preserved. These poems serve as a reflection of the social dynamics prevalent in Tamil society of the Sangam period. While the exact number of female poets is subject to scholarly debate, the widely accepted figure is thirty

## பொன்முடி'யார்'?

**முனைவர் ஜெ.காவேரி,**
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர், வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர்.
kaveri@vvvcollege.org

தமிழ் இலக்கியத்தில் சங்க இலக்கியம் என்பது தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களைச் சுமந்து நிற்கும் உயர் கோபுரமாக விளங்குகிறது. அந்த இலக்கிய மரபில் ஆண்பாற் புலவர்களைப் போல, பெண்பாற் புலவர்களும் தங்களின் படைப்பாற்றலையும் கல்விப் புலத்தையும் வெளிப்படுத்தி நின்றனர். ஆண்பாற் புலவர்களின் பாடல்கள் கிடைத்த அல்லது தொகுத்த அளவில் பெண்பாற் புலவர்களின் பாடல்கள் இல்லையென்றாலும் பெண்களின் சிற்சில பாடல்களும் காணக் கிடைக்கின்றன. அந்தவகையில், பெண்பாற் புலவர்களின் பாடல்கள் அக்காலக்கட்டத் தமிழ்ச் சமூகத்தின் செயற்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் பாடியுள்ளனர்.

பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை இன்னது என்பதில் சிக்கல்கள் இருந்து வருகின்றன. எனினும், பொதுவாக முப்பது பெண்பாற் புலவர்கள் என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளும் செய்தியாகும்.

**பொன்முடியார்**

பொன்முடியார் சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு தமிழ்ப் பெண்புலவர். மறக்குடியில் பிறந்தவராக குறிப்புகள் கிடைக்கின்றன. இவர் சேரநாட்டின் ஒரு பகுதியான குட்டநாட்டின் வடக்குப்பக்கத்தில் பொன்முடி நல்லூர் என்னும் ஊரில் பிறந்தவர் என்று சுட்டப்படுகின்றார். இவரின் பெருமையைப் பாராட்டி அரசர் எவரேனும் பொன்முடி பரிசளித்து இருக்கலாம் என்கிறார் உ.வே.சா[1.] இவரது பெயரால் புறநானூறு பாடல்கள் உள்ளன. அவை 299, 310, 312 வரிசை எண்களில் உள்ளன. இவரின் பெயரால் பொன்முடி என்ற ஊர் பெயர் உருவாகி, தற்பொழுது அது மருவி பொம்மிடி என மாறி இருக்கலாம்.

பொன்முடியார் என்னும் புலவர் ஆணா, பெண்ணா என்பதிலும் சில குழப்ப நிலைகள் இன்னும் நீடிக்கின்றன. ஏனென்றால், அவரின் பாடல்கள் உணர்த்தும் கருத்துநிலைகளே அதற்குக் காரணமாகின்றன.

**கலம் தொடா மகளிர்!**

தமிழ் இலக்கியத்தில் பெண்களுக்கு இயற்கையாக ஏற்படும் ‘மாதவிடாய்’ என்னும் செயற்பாடு குறித்து பதிவு செய்த புலவராகப் பொன்முடியார் உள்ளார்.

இந்தப் பாடலானது நொச்சித் திணையில் குதிரை மறம் என்னும் துறையில் அமைந்துள்ளது. ‘மதிலை முற்றுகையிட்ட பகையரசனை மதிலுக்குரியோர் நொச்சிப் பூவையோ அல்லது மாலையையோ சூடித் தன் மதிலைக் காத்தல்’ என்னும் நிகழ்வாகும். அதேபோன்று, குதிரை மறம் என்பது ‘வேற்படைக் கொண்டு செய்யும் போரில் குதிரையின் திறத்தினைக் கூறுவதாகும்’. இந்தச் சூழலில் அமைந்த பாடலானது பெண்களின் அகச்செயற்பாடான மாதவிடாய் நிகழ்வினை ஆண்களின் புறச்செயல்களுக்கு ஒப்புமையாகக் கூறப்பட்டுள்ளது. இதில், பெண்கள் மாதவிடாய் காலத்தில் முருகன் கோவிலினுள் நுழையாமல் எப்படி ஒதுங்கி நிற்கின்றனரோ அதேபோன்று, பகையரசனின் குதிரைகள் விலகி நிற்கின்றன என்று குறிப்பிடப்படுகின்றது.

*பருத்தி வேலிச் சீறூர் மன்னன்*

*உழுத்துஅதர் உண்ட ஓய்நடைப் புரவி,*

*கடல்மண்டு தோணியின், படைமுகம் போழ_*

*நெய்ம்மிதி அருந்திய, கொய்சுவல் எருத்தின்,*

*தண்ணடை மன்னர், தாருடைப் புரவி,*

*அணங்குஉடை முருகன் கோட்டத்துக்*

*கலம்தொடா மகளிரின், இகழ்ந்துநின் றவ்வே.2*

‘கலந்தொடா மகளிர்’ என்று பெண்களைச் சுட்டிக்காட்டி, பெண்களுக்கு சமூகத்தில் இருந்த நிலை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆண் மையச் சிந்தனையும் அதிகாரமும் இப்பாடலில் காட்டப்படுகின்றது. ஒருவேளை பொன்முடியார் பெண்ணாக இருந்தால், அக்காலக்கட்ட சமுதாயம் பெண்ணை வைத்தே பெண்களை அடிமைபடுத்தியும் ஒடுக்கியும் வந்துள்ளது என்பதும் திண்ணம். இன்றேல் ஒரு ஆணின் எண்ணமே இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**என்தலைக் கடனே**

இதற்கு அடுத்தப் பாடலிலும் பெண்ணின் அறிவார்ந்த செயற்பாடுகளைச் சுட்டாமல் பெண்ணின் உடலரசியல் குறித்தே பேசப்படுவதன் நோக்கத்தினை உய்த்துணரலாம். ஆணாதிக்கச் சிந்தனை மரபில் பெண் கருவுற்று குழந்தைப் பெற்றெடுக்கும் கருவியாகவே சித்தரிக்கப்பட்டுள்ள அவலத்தைக் காணமுடிகிறது. பெண் இச்சமூகத்தில் சக உயிரி என்பதனை மறந்த ஆணாதிக்கச் சமூகம், பெண்களை உயிர் உற்பத்தி அல்லது மறு உற்பத்தி செய்யும் நிலைக்கு மட்டுமே பயன்படுத்தி வந்ததை எடுத்துக்காட்ட பின்வரும் பாடல் தக்கச் சான்றாக உள்ளது. அப்பாடல்,

*ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;*

*சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;*

*வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;*

*நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;*

*ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்,*

*களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே”3*

இப்பாடலில், ‘தந்தை, கொல்லன், வேந்தன், காளை’ என்ற நான்கு நிலைகளில் ஆண்களை உயர்த்திப் பேசும் பெண்பாற் புலவராகக் கருதப்படும் பொன்முடியார் முதலடியில் பெண்ணின் தலைமைச் சான்ற கடமையாக ‘நல்ல’ ஆண் மக்களைப் பெற்றெடுத்துக் கொடுத்தல்

என்பதாகக் கூறுகிறார். இது ஆண் அதிகாரம் மிகுந்தும் பெண்ணை நுகர்வு பண்டமாகக் கருதிய மனநிலையையும் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

**பொன்முடியார் பாடல்களில் ஆணாதிக்கச் சிந்தனை:**

பொன்முடியார் பாடல்களில் பெண்ணை இரண்டாம் நிலைக்குத் தள்ளி, ஆணுக்கு முதன்மை கொடுக்கும் ஆணாதிக்கச் சிந்தனை வெளிப்படையாகத் தெரிகிறது. அவர், பெண்களை 'கலந்தொடா மகளிர்' (அதாவது, ஆண்களுடன் கலக்கக் கூடாத பெண்கள்) என்றும், 'பெண்ணின் தலையாய கடமை குழந்தையைப் பெற்று வளர்ப்பதுதான்' என்றும் குறிப்பிடுகிறார். இது பெண்களை வீட்டுக்குள் முடக்கி, அவர்களின் உலகத்தை குடும்பத்துக்குள் சுருக்குகிறது.

அதே சமயம், அவர் ஆண்களை உயர்த்திப் பேசுகிறார். 'தண்ணடை மன்னர்' (அதாவது, குளிர்ச்சியான ஆட்சி செய்பவர்) என்று ஆண்களைப் புகழ்கிறார். மேலும், 'ஒரு தந்தையின் கடமை தன் மகனை சான்றோன் ஆக்குவது; ஒரு காளையின் கடமை போரில் யானையை வீழ்த்துவது' என்று ஆணின் வீரத்தையும், சமூகத்தில் அவர்களுக்குரிய பொறுப்பையும் வலியுறுத்துகிறார். இதன் மூலம், ஆண்மையையும் அதிகாரத்தையும் அவர் பெருமைப்படுத்துகிறார்.

**ஆணாதிக்கச் சிந்தனையின் வெளிப்பாடு:**

பொன்முடியார் எழுதிய பாடல்களில் காணப்படும் இந்த ஆணாதிக்கச் சிந்தனையானது, அக்கால சமூகத்தில் ஆழமாக வேரூன்றி இருந்த ஆணாதிக்க மனநிலையை பிரதிபலிக்கிறது. அக்கால சமூகத்தில் பெண்களை ஆண்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகவும், அவர்களின் ஆதிக்கத்தின் கீழ் வாழ்பவர்களாகவும் கருதியுள்ளனர். இந்த சிந்தனையின் வெளிப்பாடாகவே பொன்முடியார் பாடல்கள் அமைந்துள்ளன.

**பொன்முடியாரின் பாலின அடையாளம்:**

இந்த ஆணாதிக்கச் சிந்தனை கொண்ட பாடல்களை எழுதியவர் பொன்முடியார் என்னும் பெண்பாற் புலவர் என்பது இங்கு கவனிக்கத்தக்கது. பொன்முடியார் ஆணாக இருந்திருந்தால், அவரது ஆணாதிக்கப் பார்வை இயல்பானது என்று நாம் கடந்து சென்றிருக்கலாம். ஆனால், அவர் ஒரு பெண் என்பதால், அக்கால சமூகத்தில் பெண்கள் எந்த அளவுக்கு ஆணாதிக்க சிந்தனையால் பாதிக்கப்பட்டிருந்தார்கள் என்பதை இது காட்டுகிறது. ஒரு பெண்ணே ஆணாதிக்கத்தை ஆதரித்துப் பேசியிருக்கிறார் என்றால், அது அக்கால சமூகத்தின் ஆணாதிக்க மனநிலையின் ஆழத்தையும், அதன் தாக்கத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

**தற்காலப் பார்வை:**

இன்றுவரை, பொன்முடியார் ஒரு பெண்பாற் புலவராகவே அறியப்படுகிறார். ஆனால் அவர் பாடல்களில் காணப்படும் ஆணாதிக்க கருத்துகள், அவர் வாழ்ந்த காலத்தின் சமூக ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படுத்துகிறது. மேலும், 'பெண் ஆணுக்குக் கட்டுப்பட்டவள்' என்ற ஆணாதிக்கக் கருத்து, அக்கால சமூகத்தில் எவ்வளவு ஆழமாக வேரூன்றி இருந்தது என்பதற்கு பொன்முடியார் பாடல்கள் சான்றாக அமைகின்றன.

பொன்முடியார் பாடல்கள் ஆணாதிக்கச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றன; அவை பெண்களை இரண்டாம் பட்சமாக நடத்துகின்றன; ஆணுக்கு முக்கியத்துவம் தருகின்றன. இது அக்கால சமூகத்தில் நிலவிய ஆணாதிக்க மனநிலையின் வெளிப்பாடாகும். பொன்முடியார் ஒரு பெண் புலவராக இருந்தும், அவரது பாடல்களில் காணப்படும் இது போன்ற சிந்தனைகள் அக்கால சமூகத்தில் ஆணாதிக்கம் எவ்வளவு ஆழமாக வேரூன்றி இருந்தது என்பதை தெளிவாக உணர்த்துகிறது.

**தொகுப்புரை**

பொன்முடியார் பாடல்களானது பெண்ணைத் தாழ்வுப்படுத்தியும் அல்லது இரண்டாம் நிலைக்குத் தள்ளியும் ஆணை முதன்மைப்படுத்தும் போக்கினை அவர்தம் எழுத்துகளின் வழி காணமுடிகிறது. 'கலந்தொடா மகளிர்', 'ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே' என்று பெண்ணைக் குறிப்பிட்டும் ஆண்களை உயர்த்திக் குறிப்பிடும் நிலையையும் காணலாம். 'தண்ணடை மன்னர்' என்றும் 'சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;' 'களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' என்றும் ஆண் மையச் சிந்தனைப் போக்குகளையும் அதிகாரத்தின் போக்குகளையும் தன்மைகளையும் எடுத்துரைக்கின்றார்.

எனவே பொன்முடியார் ஆணாக இருக்கையில், இச்சிந்தனையானது ஆணின் பார்வையாகக் கொள்ளப்பெறும். அதில் மாற்றுக்கருத்து ஏதுமில்லை. ஆனால், இன்றுவரை இது பொன்முடியார் என்கிற பெண்பாற் புலவரின் பாடலாகவே மிளிர்கிறது. 'ஆணுக்குக் கட்டுப்பட்டவள் பெண்' என்கிற ஆணாதிக்கச் சிந்தனைப் போக்கு அக்காலக்கட்ட சமுதாயத்தில் வேரூன்றி இருந்ததைப் பொன்முடியார் பாடல்கள் பறைசாற்றுகின்றன.

**அடிக்குறிப்பு**

1. மது. சா., விமலானந்தம். தமிழ் இலக்கிய வரலாறு. பக்கம் எண் - 64.
2. *புறநானூறு - பாடல் எண் - 299*
3. *புறநானூறு - பாடல் எண் - 312.*

**References:**

1. Madhu. Ch., Vimalanandham. History of Tamil Literature. Page No. - 64.
2. Purananuru – Song No. - 299
3. Purananuru – Song No. - 312.

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

KALANJIYAM